ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2039/27 – 2017 ඔක්තෝබර් මස 04 වැනි බදාදා – 2017.10.04

*2039/27 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 21/1978* (x).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும் பிவி 62877 ஆம் இலக்க பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டட் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் (70இ) என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு அதன் நிரல் I இல் காணப்படும் " தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ விஞ்ஞான இளமானி" என்னும் பதிவையும் அதன் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள அதனது நேரொத்த பதிவையும் உடனடுத்து இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே I ஆம் மற்றும் II ஆம் நிரல்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் தேதிய 1975/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளைமூலம் திருத்துகின்றேன்.*

**அட்டவணை** I

*நிபந்தனைகள்*

*ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது வலைப்பின்னல் மற்றும் செல்லிடைக் கணினி தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ இளமானிப் பட்டம் தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டநிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்க்கின்றபோது 995 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றிக்கையின்படி க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்திட்டத்தில் குறைந்தது நுழைவுத் தகைமைகளாக 3 சாதாரண சித்திகளை ( 'S' ) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் பின்பற்றுதல் வேண்டும்.*

1A - PG3714 - 507 (2017/10)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** II

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களின் சுருக்கீடுகள்* |
|---|---|
| உணவுப் பாதுகாப்பு மற்றும் விலங்கு, தாவர சுகாதாரத்தில் பட்டப்பின் டிப்புளோமா | பி. ஜி. டிப் (உணவுப் பாதுகாப்பு மற்றும் விலங்கு, தாவர சுகாதாரம்) |
| வலைப்பின்னல் மற்றும் செல்லிடைக் கணினி தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ இளமானி | பி. ஐ. ரி. கௌரவ (வலைப்பின்னல் மற்றும் செல்லிடைக் கணினி) |

ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 25அ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 2017, சனவரி 20 ஆந் திகதிய 2002/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை, அதன் கீழ் சட்டமுறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

கொழும்பு,
*2017, செத்தெம்பர் 28.*

*10-585*